ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2023.11.15

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2023 ஒத்தோபர்

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2023 ஒத்தோபரில் தயாரித்தல் நடவடிக்கைகளில் மெதுவடைந்த சுருக்கத்தையும் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலையும் எடுத்துக்காட்டின.**

**தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 ஒத்தோபரில் 49.5 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, மாதகாலப்பகுதியில் அடிப்படை அளவினை அண்மித்தது.** துணைச் சுட்டெண்களைக் கருத்திற்கொள்கையில், மாதகாலப்பகுதியில் புதிய கட்டளைகளும் கொள்வனவு இருப்புக்களும் அதிகரித்த அதேவேளை, உற்பத்தி மற்றும் தொழில்நிலை என்பன சுருக்கமடைந்து காணப்பட்டன.

பிரதானமாக, பருவகால கேள்வியின் காரணமாக, புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையின் தயாரிப்பினால் தூண்டப்பட்டு, மாதகாலப்பகுதியில் புதிய கட்டளைகள் விரிவடைந்தன. அதேவேளை, உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உணவு மற்றும் குடிபானத் துறையின் தயாரிப்பு பிரதான காரணமாக இருந்ததுடன் நிலவிய கடுமையான வானிலை நிலைமைகள் பகுதியளவில் காரணமாக அமைந்தன. மேலும், பதவிவிலகுதல்கள் மற்றும் ஓய்வுபெறுதல்களுக்காக மாத்திரம் பெரும்பாலான நிறுவனங்கள் ஆட்சேர்ப்பு செய்தமையினால் தொழில்நிலை மாதத்திற்கு மாதம் அடிப்படையில் தொடர்ந்தும் குறைவடைந்தது. பருவகால உற்பத்தியை இலக்காகக்கொண்டு, மாதகாலப்பகுதியில், மூலப்பொருட்களின் ஒன்றுதிரட்டல் காரணமாக ஒட்டுமொத்த கொள்வனவுகளின் இருப்பு அதிகரித்தது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒத்தோபர் காலப்பகுதியில் மெதுவான வேகத்தில் குறுக்கமடைந்தது.

| மாறி | செத் | ஒத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **45.7** | **49.5** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | | | |
| புதிய கட்டளைகள் | 43.5 | 50.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 44.5 | 49.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 47.5 | 46.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 47.0 | 52.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 49.0 | 49.5 | + | குறுக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரவிருக்கும் பண்டிகைப் பருவகாலத்தில் கேள்வியில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பின் காரணமாக அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கை சாதகமாகக் காணப்பட்டது.

**தயாரிப்பு கொ.மு.சு 49.5**

**2023 ஒத்தோபர்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் பெறுமதி செத்தெம்பரிலிருந்து 0.4 புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2023 ஒத்தோபரில் 48.8 கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது.

இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. 2023 ஒத்தோபரில் மெதுவான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் இது ஐக்கிய அமெரிக்காவில் இயல்பான மட்டத்திலிருந்தது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் சீனா ஆகிய நாடுகளில் தயாரிப்பு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஒத்தோபரில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 நவெம்பர் 15 அன்று உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 ஒத்தோபரில் 56.2 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, பணிகள் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இதற்கு முன்னிலை வகித்திருந்தன. எவ்வாறிருப்பினும், நிலுவையிலுள்ள பணிகள், தொழில்நிலை என்பன மாதகாலப்பகுதியில் சுருக்கமடைந்து காணப்பட்டன.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் காப்புறுதி துணைத்துறைகள் ஆகியவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 ஒத்தோபரில் அதிகரித்தன.

2023 ஒத்தோபரில் தொழில் நடவடிக்கைகளும் உயர்வான வேகத்தில் விரிவடைந்தமைக்கு அநேகமான துணைத்துறைகளில் சாதகமான அபிவிருத்திகளுக்குப் பங்களித்தன. அதற்கமைய, கொடுகடன் கேள்வியில் அவதானிக்கப்பட்ட சில முன்னேற்றங்களுக்கு மத்தியில், நிதியியல் பணிகள் துணைத் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் தொடர்ந்தும் அதிகரித்தன. மேலும், மாதகாலப்பகுதியில் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், மற்றும் ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத்துறைகளிலும் சில குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் காணக்கிடைத்தன.

தொழில்நிலையானது முன்னைய மாதத்தின் சிறிதளவான அதிகரிப்பிற்கு பின்னர் அடிப்படை அளவு மட்டத்திற்கு கீழே வீழ்ச்சியடைந்த அதேவேளை, ஒத்தோபர் காலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகளும் மெதுவான வேகத்தில் குறைவடைந்தன.


| மாறி | செத் | ஒத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **54.7** | **56.2** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | கொ.மு.சு துணைச் சுட்டெண்கள் | | | |
| புதிய வியாபாரங்கள் | 55.8 | 58.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 53.4 | 63.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.0 | 45.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 41.1 | 46.2 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 72.3 | 68.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், ஒத்தோபரில் தொடர்ந்தும் அதிகரித்தது. வரவிருக்கும் பண்டிகை மற்றும் சுற்றுலா பருவகாலப் பகுதியில், தமது தொழில் நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றங்களை பல பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டினர். எனினும், மின்சார கட்டணத்தில் ஏற்பட்ட அண்மைய அதிகரிப்பு மற்றும் முன்மொழியப்பட்ட பெறுமதிசேர் வரியில் அதிகரிப்பு பற்றி சில பதிலிறுப்பாளர்கள் தமது கரிசனைகளைத் தெரிவித்தனர்.

**பணிகள்**
**கொ.மு.சு 56.2**
**2023 ஒத்தோபர்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*உலகத் தோற்றப்பாடு:*
*பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 ஒத்தோபரில் 50.4 ஐப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்தியது.

சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 ஒத்தோபரில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை ஐக்கிய இராச்சியத்தின் பணிகள் கொ.மு.சு அந்நாட்டின் பணிகள் நடவடிக்கைகளில் சீர்குலைவினை எடுத்துக்காட்டியது..

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2023 நவெம்பர் 15 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.
கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.
**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.